இணைப்பு

அ.ஆ.(நிலை) எண்.84, பி, மி.பி (ம) சி.ந துறை, நாள் 18.9.2009

# உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்

## நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள்

## உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்


| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 -2 |
| 2. | உறுப்பினர் பதவிக்கு விண்ணப்பிக்கும் வழிமுறை | 2–3 |
| 3. | நலத்திட்ட உதவிகளுக்கு விண்ணப்பிக்கும் வழிமுறை | 3 – 4 |
| 4. | தற்காலிக உறுப்பினர் நீக்கம் அல்லது இரத்து செய்தல் | 4 |
| 5. | உறுப்பினர் பதிவை புதுப்பித்தல் | 4 |
| 6. | முதியோர் ஓய்வூதியத் திட்டம் | 5 |
| 7. | ஈமச்சடங்கு உதவித்தொகை | 5 |
| 8. | இயற்கை மரண உதவித்தொகை | 5 |
| 9. | விபத்தால் மரணம் மற்றும் நிவாரணத் தொகை கேட்பு | 6–8 |
| 10. | கல்வி உதவித்தொகை | 8–9 |
| 11. | திருமண உதவித்தொகை | 10 |
| 12. | மகப்பேறு/கருச்சிதைவு உதவித்தொகை | 10 |
| 13. | கண்கண்ணாடி வாங்குவதற்கு உதவித்தொகை | 10 |
| 14. | பொதுவான அறிவுரைகள் | 11 |
| 15. | உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவித்தொகை பற்றிய விவரங்கள் | 12 |
| 16. | உறுப்பினர் சேர்க்கை அடையாள அட்டை மற்றும் நல திட்ட உதவிகள் பெறுவதற்கான விண்ணப்ப படிவ எண்களின் விவரங்கள் | 13 |
| 17. | உறுப்பினராக பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்–1 | 14–15 |
| 18. | அடையாள அட்டை (படிவம் – 2) | 16–17 |
| 19. | உறுப்பினர்கள் விபத்தினால் இறப்பு அல்லது ஊனம் ஏற்படின் ஊனத்தின் தன்மைக்கேற்ப உதவித் தொகை கேட்பு விண்ணப்ப படிவம் – 3 | 18 |
| 20. | உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரிய உறுப்பினர் இயற்கை மரணம் / ஈமச்சடங்கு உதவித் தொகை பெற விண்ணப்பப் படிவம் – 4 | 19–20 |
| 21. | 10 அல்லது 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கு கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பப் படிவம் – 5 | 21 |
| 22. | 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலுவதற்கு கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பப் படிவம் – 6 | 22 |

| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் எண். |
| --- | --- | --- |
| 23. | பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு / தொழிற்கல்வி பட்ட படிப்பு / தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு பயில்வதற்கு கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பப் படிவம் – 7 | 23–24 |
| 24. | குடும்ப உறுப்பினர் திருமண உதவித்தொகை பெற விண்ணப்பப் படிவம் – 8 | 25–27 |
| 25. | குழந்தை பிறப்பு அல்லது கருச்சிதைவிற்கான உதவித்தொகை வழங்குதற்கான விண்ணப்பப் படிவம் – 9 | 28 |
| 26. | கண் கண்ணாடி வாங்குவதற்கு உதவித் தொகை கோரும் விண்ணப்பப் படிவம் – 10 | 29 |
| 27. | முதியோர் ஓய்வூதியம் கோரும் விண்ணப்பப் படிவம் – 11 | 30–31 |
| 28. | முடக்க ஓய்வூதியத்திற்கான விண்ணப்பப் படிவம் – 12 | 32–33 |

# அ.ஆ.(நிலை) எண்.84, பி, மி.பி (ம) சி.ந துறை, நாள் 18.9.2009இன் இணைப்பு

## உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் பல்வேறு நல உதவிகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள்

அரசாணை ( நிலை) எண்.74, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 24.08.2009–ன்படி உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டது. மாண்புமிகு சுற்றுச் சூழல் மற்றும் வக்ஃப் அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், அரசு சார் உறுப்பினர்களாக 10 பேர்களும் அலுவல் சாரா உறுப்பினர்களாக 15 பேர்களையும் கொண்டு உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் இயங்கி வருகிறது.

அரசாணை ( நிலை) எண்.74, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 24.08.2009–ன் படி உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்குவதற்கான வழிமுறைகள் குறித்த ஆணை வெளியிடப்பட்டது.

i. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினராக பதிவுத்தகுதி பெறுபவர்களுக்கான நிதியுதவித் திட்டம் 24.08.2009 முதல் நடைமுறைக்கு வருகிறது.

ii. இத்திட்டம் தமிழ் நாடு முழுவதற்கும் பொருந்தும்.

iii. இத்திட்டத்தின்படி தமிழ்நாட்டில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் மதரஸாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள் / ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் இதர பணியாளர்கள், தர்காக்கள், அடக்கஸ்தலங்கள், தைக்காக்கள், ஆஷூர்கானாக்கள் மற்றும் முஸ்லிம் அனாதை இல்லங்கள் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் முஜாவர் உள்ளிட்ட பணியாளர்கள் பயன்பெறத் தகுதியுடையவராவர். (Eligible to become beneficiaries)

iv. பதிவு பெற்றவுடன் உறுப்பினர் இறப்பின், அவரைச் சார்ந்தவர்கள் (legalheirs)என்ற பட்டியலில் மனைவி அல்லது கணவன் (ii) பிள்ளைகள் (iii) விதவை மற்றும் முன்னரே இறந்த விட்ட காலமான மகளின் பிள்ளைகள் ஆகியோர் அடங்குவோர் .

v. குடும்பம் என்பதில், ஆண் உறுப்பினராக இருப்பின் அவரது மனைவி, திருமணமான அல்லது திருமணமாகாத அவரது பிள்ளைகள், சார்ந்துள்ள பெற்றோர், விதவை மருமகள், உறுப்பினரின் இறந்த மகனின் பிள்ளைகள் ஆகியோர் அடங்குவர்.

vi. பெண் உறுப்பினராக இருப்பின், அவரது கணவர், பிள்ளைகள் ஆகியோர் குடும்பம் என்ற வரைமுறையில் அடங்குவர்.

vii. 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்குட்பட்ட பள்ளிவாசல்கள் மற்றும் மதரஸாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள் / ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் இதர பணியாளர்கள், தர்காக்கள், அடக்கஸ்தலங்கள், தைக்காக்கள், ஆஷுர்கானாக்கள் மற்றும் முஸ்லிம் அனாதை இல்லங்கள் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் முஜாவர் உள்ளிட்ட பணியாளர்கள் இந்நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு பெறத் தகுதியுடையவர் ஆவர். (Eligible to become member)

## 2. உறுப்பினர் பதிவுக்கு விண்ணப்பிக்கும் வழிமுறை

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினர் பதிவுக்கான விண்ணப்பத்தினை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடமிருந்து பெறலாம் . விண்ணப்பிப்பவர், இந்நல வாரிய உறுப்பினராக பதிவு பெறத் தகுதியுடையவர் என்பதற்கு ஆதாரமாக அவர் பணிபுரியும் பள்ளி வாசல்கள், மதராஸாக்கள் போன்ற நிறுவனத்திலிருந்து சான்றிதழ் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு அனுப்ப வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆளுகைக்குட்பட்ட வக்ஃப் கண்காணிப்பளாருக்கு விசாரணை மற்றும் சரிபார்த்தலுக்காக அனுப்பிவைக்க வேண்டும். வக்ஃப் கண்காணிப்பாளர் / வக்ஃப் ஆய்வாளர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடமிருந்து பெறும் விண்ணப்பங்களின் உண்மைத்தன்மை குறித்து முறைப்படி விசாரணை மற்றும் சரிபார்த்தல் மேற்கொண்டு தகுதியான விண்ணப்பங்களை மட்டும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு பரிந்துரையுடன் சமர்ப்பிக்க வேண்டும். தகுதியற்ற விண்ணப்பங்களை நிராகரித்தும் அறிக்கை அனுப்ப வேண்டும். வக்ஃப் கண்காணிப்பாளர் பரிந்துரையுடன் பெறப்படும் விண்ணப்பங்களை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் கூர்ந்தாய்வு (Scrutiny) செய்து விண்ணப்பதாரரை வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து உறுப்பினருக்கு அடையாள அட்டையை வழங்குவார்.

**வேறு ஏதாவது நல வாரியங்கள் மூலம் நலத்திட்ட உதவிகள் பெறுபவர்கள் இவ்வாரியம் மூலம் மீண்டும் அதே நல உதவித் திட்டங்களை பெறத் தகுதியற்றவராவார்.**

I. இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர்கள் பதிவுகாலம் 3 ஆண்டுகளுக்கு செல்லத்தக்கது.

II. பதிவு பெற்ற உறுப்பினருக்கும் ஓர் அடையாள அட்டை இலவசமாக வாரியத்தால் வழங்கப்படும்.

III. அடையாள அட்டையை இழந்துவிட்டால் ரூ.20/– செலுத்தி மாற்று அடையாள அட்டை பெற்றுக்கொள்ளலாம்.

IV. பதிவுபெற்ற உறுப்பினர் இறப்பின் அவரது குடும்பத்திற்குச் சேர வேண்டிய நிதியுதவியைப் பெறுவதற்கு நியமனதாரரின் பெயர், முகவரி மற்றும் உறவு ஆகிய விவரங்களை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட வேண்டும்.

V. நியமனதாரரை நியமிக்கும் பொழுது உறுப்பினரின் குடும்பத்தைச் சார்ந்த ஒருவரையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரையோ நியமனதாரராக நியமிக்க வேண்டும். குடும்ப உறுப்பினர் அல்லாதவரை நியமனதாரராக நியமனம் செய்வது செல்லாது.

VI. நியமனதாரரை நியமிக்கும் பொழுது உறுப்பினருக்குக் குடும்பம் இல்லையெனில், நியமிப்பாளராக யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம்.

VII. நியமனதாரரை நியமித்த பின் உறுப்பினருக்குக் குடும்பம் ஏற்பட்டால், ஏற்கனவே அளித்த நியமனம் உடனடியாகச் செல்லத்தகாததாகிவிடும். குடும்பம் ஏற்பட்டபின் 90 நாட்களுக்குள் குடும்ப உறுப்பினர் ஒருவரையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரையோ நியமித்தல் வேண்டும்.

VIII. பதிவு பெற்ற உறுப்பினர் இறப்பதற்கு முன் நியமிப்பாளர் இறக்கும் பட்சத்தில் நியமிப்பாளர் நியமிக்கும் உரிமை உறுப்பினருக்கு மீள வரும். அவர் புதிதாக வேறு குடும்ப உறுப்பினர் நியமனம் செய்ய வேண்டும்.

## 3. நலத்திட்ட உதவிகளுக்கு விண்ணப்பிக்கும் வழிமுறை

I. பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நலத்திட்ட உதவிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் தகுந்த சான்றுகளுடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும். பத்தி 2–இல் தெரிவிக்கப்பட்டபடி வக்ஃபு கண்காணிப்பாளர் மூலம் விசாரணை செய்து பெறப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் நலத்திட்ட உதவிகளை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்வார். மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், சிறுபான்மையினர் நல ஆணையரிடமிருந்து தேவைப்படும் நிதி பெற்று, உறுப்பினர் / பயனாளிக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவார்.

II. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து உள்ளவர்கள் நிதியுதவி பெறுவதற்கு இத்துடன் இணைக்கப்பட்ட உரிய படிவத்தில் பூர்த்தி செய்து அவ்விண்ணப்பத்தில் சம்பந்தப்பட்ட நிறுவன முத்தவல்லி/நிர்வாகி உண்மைச் சான்றிதழில் கையொப்பம் இடவேண்டும். சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

## 4. தற்காலிகமாக உறுப்பினர் நீக்கம் அல்லது இரத்து செய்தல்

பதிவு பெற்ற **உறுப்பினர்** தவறான தகவல்கள் கொடுத்தோ , விதிகளுக்கு அல்லது உரிய சட்டத்திற்குப் புறம்பாகவோ நிதியுதவி பெற்றுள்ளார் எனத் தெரியவரின், விசாரணை முடியும் வரை, அவரது உறுப்பினர் நிலை தற்காலிமாக நீக்க மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அதிகாரம் பெற்ற அலுவலர் ஆவார்.

**உறுப்பினர்** , தவறான தகவல்கள் கொடுத்தது, விதிகளை அல்லது உரியசட்டத்தை மீறியுள்ளது விசாரணையில் தெரியவந்தால் அவரது உறுப்பினர் நிலை இரத்து செய்யப்படும். உறுப்பினர் இரத்து செய்வதற்கு முன் உறுப்பினருக்குப் போதிய வாய்ப்புகள் அளிக்கப்படும்.

இரத்து செய்யப்பட்ட உறுப்பினருக்கு மேல்முறையீடு வாய்ப்பு அளிக்கப்படும் உறுப்பினர் இரத்து ஆணை பிறப்பிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்ய வேண்டும் உரிய முகாந்திரங்களிருப்பின் 30 நாட்களுக்கு மேற்பட்டு ஆனால் 90 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்ய வாய்ப்பு அளிக்கப்படும். மேல்முறையீடு அலுவலரின் (உறுப்பினர்–செயலர், உலாமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியம்) உத்தரவே இறுதியானது.

## 5. உறுப்பினர் பதிவைப் புதுப்பித்தல்

i. உறுப்பினர் பதிவு செய்து 3 ஆண்டுகள் முடியும் தருவாயில் மீண்டும் பதிவை புதுப்பிக்க வேண்டும்.
ii. உரிய காலக் கெடுவுக்குள் புதுப்பிக்கத் தவறினால், உறுப்பினர் தகுதியை இழப்பர்.
iii. உறுப்பினர் தகுதி இழப்புப் பற்றி தனியே உத்திரவு பிறப்பிக்கப்படமாட்டது.
iv. உறுப்பினர்தகுதியை இழந்தவர் வாரியத்தால் அதிகாரமளிக்கப்படும் அலுவலர் மூலம் மீண்டும் உறுப்பினராகப் பதிவு பெறலாம். மீண்டும் உறுப்பினராகப் பதிவு பெற்றாலும் அவர் உறுப்பினர் தகுதி இழந்த காலத்தில் கிடைக்க வேண்டிய நிதியுதவி பெறத் தகுதியற்றவர் ஆவார்

## 6. முதியோர் ஓய்வூதியத் திட்டம்

1. **தகுதி** ஒவ்வொரு பதிவு பெற்ற உறுப்பினரும் 5 ஆண்டுகள் தொடர்ந்து பணியாளராகப் பணிபுரிந்து 60 வயது பூர்த்தி செய்திருந்தால் முதியோர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவராவர். வாரியத்திடம் 5 ஆண்டுகள் தொடர்ந்து பதிவு பெற்றிருப்பின், 60 வயது பூர்த்தியடைவில்லையெனில் நோயின் காரணமாக வேலை செய்ய இயலாத நிலையிலிருப்பவர் மற்றும் சாதாரண வேலை செய்ய உடல் தகுதி பெறாத நிலையிலிருப்பவர் ஆகியோருக்கு முதியோர் ஓய்வூதியம் பெறத் தகுதியுண்டு.

2. **ஓய்வூதியம் கோருதல்**

   i) ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய ஒவ்வொரு பதிவு பெற்ற உறுப்பினரும் உரிய படிவத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

   ii) வேலை செய்ய உடல் தகுதியற்று, முதியோர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய உறுப்பினர் குடிமை அறுவை சிகிச்சை நிபுணர் நிலைக்கு குறையாத மருத்துவ அலுவலரின்(not below the rank of Civil Surgeon) சான்றுடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

   iii) முதியோர் ஓய்வூதியம் கோரும் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் ஆய்வு செய்து விதிகளுக்குப்பட்டு கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ செய்யலாம். இவ்வாரியத்தின் முடிவே இறுதியானது.

   **iv) முதியோர் ஓய்வூதியத் தொகை (மாதந்தோறும்) ரூ.400/– ஆகும். அரசால் வழங்கப்படும் உலமா ஓய்வூதியம் பெறுவோர் இத்திட்டத்தின்படி முதியோர் ஓய்வூதியம் பெறத் தகுதியற்றவராவார்.**

## 7. ஈமச்சடங்கு உதவித்தொகை

i. பதிவு பெற்ற **உறுப்பினர்** இறப்பின், (மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்) இறந்த உலமா மற்றும் பிற பணியாளர்களின் நியமனதாரருக்கு ஈமச்சடங்கு செலவுகளுக்காக ரூ 2000/– ஒப்பளிப்பு செய்வார்.

ii. ஈமச்சடங்குக்கு உதவித் தொகை கோரும் உரிய விண்ணப்பத்துடன் உறுப்பினர் இறப்புப் பதிவு சான்றிதழ் மற்றும் வாரியத்தால் வழங்கப்பட்ட அசல் அடையாள அட்டை ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

## 8. இயற்கை மரண உதவித்தொகை

i. பதிவு பெற்ற உறுப்பினர் இயற்கை மரணம் எய்தினால் நியமனதாரருக்கு ரூ. 15000/– உதவித் தொகை வழங்கப்படும்.

ii. இவ்வுதவித் தொகை கோரும் விண்ணப்பத்துடன் இறப்புப் பதிவு சான்றிதழ் மற்றும் அசல் அடையாள அட்டை ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

## 9. விபத்தால் மரணம்

**விபத்தால் மரணம் அல்லது விபத்தினால் உடல் ஊனம் ஆகியவற்றுக்கு நிவாரணம் அளித்தல்**

பதிவு பெற்ற உறுப்பினருக்கு விபத்து ஏற்படின் விபத்து நிவாரணம் பெறத் தகுதியுடையவராவர்.

**விளக்கம்**

i. விபத்து என்ற வரம்பின்கீழ் வேலை செய்யும் காலத்தில் அல்லது வேலையின் மூலமாக மரணம், உடல் உறுப்பு இழப்பு அல்லது உடல் உறுப்பு துண்டிக்கப்படுதல் அல்லது உடல் காயம், கண்பார்வை இழப்பு ஆகியவை அடங்கும்.

ii. சுயமாக வேண்டுமென்றே ஏற்படுத்திக் கொண்ட உடல் காயம், தற்கொலை, தற்கொலைமுயற்சி, குடிபோதையால் அல்லது மருந்து மூலம் ஏற்படுத்திய காயம் அல்லது சட்டத்திற்கும் விதிமுறைகளுக்கும் புறம்பாக செயல்பட்டதால் ஏற்பட்ட மரணம் அல்லது உடல் உறுப்பு இழப்பு ஆகியவை விபத்து என்ற வரன்முறையில் வராது.

iii. உரிய மருத்துவச் சான்றிதழ் சம்ர்ப்பிக்கப்பட வேண்டும்.

iv. விபத்தால் ஏற்பட்ட இறப்பு அல்லது பல்வகையான உடல் உறுப்பு இழப்பு ஆகியவற்றுக்கு கீழ்க்கண்டவாறு நிர்ணயக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

| | |
|---|---|
| (அ) இறப்பு | ரூ. 1,00,000 |
| (ஆ) பின்வரும் உறுப்புகளை இழத்தல் மற்றும் முழுவதும் அல்லது சரிசெய்ய இயலாத அளவுக்கு உறுப்புகளை இழத்தல் | |
| இரு கைகள் அல்லது இரு கால்கள் அல்லது<br>ஒரு கை மற்றும் ஒரு கால் அல்லது<br>இரு விழிகளிலும் முழுவதும் சரி செய்ய இயலாத அளவிற்கு பார்வை இழப்பு | ரூ.1,00,000 |
| (இ) பின்வரும் உறுப்புகளை இழத்தல் அல்லது முழுவதும் மற்றும் சரி செய்ய இயலாத அளவுக்கு உறுப்புகளை இழத்தல் | |
| ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் முழுவதும் சரிசெய்ய இயலாத அளவுக்கு பார்வை இழத்தல் | ரூ. 50,000 |
| (ஈ) மேலே இனங்கள் (ஆ) மற்றும் (இ) ல் குறிப்பிடப்பட்ட காயங்கள் தவிர, ஏனைய காயங்களினால் நிரந்தரமாக முழு இயலாமை ஏற்பட்டதற்கு | ரூ. 25,000 |

**(உ)** இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை கலம் 1–இல் குறிப்பிட்டவாறு ஓரளவு நிரந்தர இயலாமை ஏற்பட்டதற்கு கலம் 2–இல் நிகரான குறிப்பிட்டுள்ள விகிதத்தில் கணக்கிடப்பட வேண்டும்.

## அட்டவணை

| இயலாமையின் தன்மை | உடல் உறுப்புகளின் இழப்பீடு | சதவீதம் (இழப்பீடு சதவீதத்தில் ரூ. 1,00,000–ல் கணக்கிடப்பட வேண்டியது) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (i) கால் விரல்கள் இழப்பு | அனைத்தும் | 20 (இருபது) |
| | கால் பெருவிரலில் இரு தனி எலும்புகள் | 5 (ஐந்து) |
| | கால் பெருவிரலில் ஒரு தனி எலும்பு | 2 (இரண்டு) |
| | கால் பெருவிரல் தவிர ஒன்றுக்கு மேற்பட்ட கால் விரல்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தனி எலும்பு | 1 (ஒன்று) |
| (ii) கேட்கும் திறன் இழப்பு | இரு காதுகள் | 50 (ஐம்பது) |
| | ஒரு காது | 15 (பதினைந்து) |
| (iii) ஒரு கையில் 4 விரல்கள் மற்றும் பெருவிரல் இழப்பு | | 40 (நாற்பது) |
| (iv) நான்கு விரல்கள் இழப்பு | | 35 (முப்பத்தைந்து) |
| (v) பெருவிரல் இழப்பு | பெருவிரலின் இருதனி எலும்புகள் | 25 (இருபத்தைந்து) |
| (vi) கட்டுவிரல் இழப்பு | மூன்று தனி எலும்புகள் | 10 (பத்து) |
| | இரு தனி எலும்புகள் | 8 (எட்டு) |
| | ஒரு தனி எலும்பு | 4 (நான்கு) |
| (vii) நடுவிரல் இழப்பு | மூன்று தனி எலும்புகள் | 6 (ஆறு) |
| | இரு தனி எலும்புகள் | 4 (நான்கு) |
| | ஒரு தனி எலும்பு | 2 (இரண்டு) |
| (viii) மோதிரவிரல் இழப்பு | மூன்று தனி எலும்புகள் | 5 (ஐந்து) |
| | இரு தனி எலும்புகள் | 4 (நான்கு) |
| | ஒரு தனி எலும்பு | 2 (இரண்டு) |
| (ix) சுண்டுவிரல் இழப்பு | மூன்று தனி எலும்புகள் | 4 (நான்கு) |
| | இரு தனி எலும்புகள் | 3 (மூன்று) |
| | ஒரு தனி எலும்பு | 2 (இரண்டு) |
| (x) மணிக்கட்டிற்கும் விரல்களுக்கும் இடைப்பட்ட உள்ளங்கைப் பகுதி இழப்பு | முதலாவது அல்லது இரண்டாவது விரல் அல்லது கூடுதல் | 3 (மூன்று) |
| | மூன்றாவது, நான்காவது அல்லது ஐந்தாவது விரல் அல்லது கூடுதல் | 2 (இரண்டு) |
| (xi)வேறு ஏதேனும் நிலையானஓரளவு இயலாமை | | மருத்துவரால் மதிப்பீடு செய்யப்பட்ட சதவீதம் |

## நிவாரணத் தொகை கேட்பு

v) வேலையின் காரணமாக ஏற்பட்ட விபத்தால் இறப்பு அல்லது உடல் உறுப்பு இழப்பு கண்பார்வை இழப்பு போன்றவற்றை வேலையளிப்பவர் வாரியத்திடமும் உரிய காவல் நிலையத்திலும் தெரிவிக்க வேண்டும். இது குறித்து காயமுற்ற பணியாளர் அல்லது இறந்துபோன பணியாளரின் நியமிப்பாளரோ அல்லது சம்மந்தப்பட்ட பள்ளிவாசல், மதரசாக்கள், அடக்கஸ்தலங்கள், தைக்காக்கள் போன்றவற்றின் பிரிதிநிதியோ வாரியத்திற்கு தெரியப்படுத்தலாம். விபத்து குறித்து அறிவிப்பு பெற்றவுடன் அவ்விபத்து குறித்து விசாரணை செய்யப்படும்.

vi) உடல் காயம், உடல் உறுப்புகள் இழப்பு அல்லது கண் பார்வை இழப்பு குறித்து நிவாரணம் கோரி பதிவு பெற்ற உறுப்பினர் விண்ணப்பம் செய்யவேண்டும். இறப்பு நிகழ்வுக்கு நிவாரணத் தொகை கோரி நியமனதாரர்கள் விண்ணப்பம் செய்யவேண்டும்.

vii) பதிவு பெற்ற உறுப்பினர் இறப்பு நிகழ்வு நிவாரணம் கோரும் விண்ணப்பத்துடன் உரிய அலுவலர்களிடமிருந்து பெற்ற இறப்புப் பதிவு சான்றிதழ், இறந்தவரின் உடல் பரிசோதனை சான்றிதழ் ஆகியவற்றை இணைக்க வேண்டும்.

viii) இறந்தவரின் உடல் பரிசோதனை சான்றிதழ் பெற 30 நாட்களுக்கு மேல் தாமதமானால் வட்டாட்சியரிடமிருந்து சான்றிதழ் பெற்று அனுப்பலாம்.

ix) உடல் உறுப்புகள் இழப்பு அல்லது கண் பார்வை இழப்பு அல்லது பகுதி உடல் ஊனம் ஆகியவற்றுக்கு உதவி குடிமை அறுவை சிகிச்சை நிபுணரிடமிருந்து (Assistant Civil Surgeon) மருத்துவச் சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

x) உதவித் தொகை கோரும் கோரிக்கையை உரியவாறு சரிபார்த்தபின் வாரியம் அல்லது வாரியத்தால் அதிகாரமளிக்கப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் உரிய உதவித் தொகையை ஒப்பளிப்பு செய்வார்.

## 10. கல்வி உதவித் தொகை

i. 10 ஆம் வகுப்பு படித்து வரும் உறுப்பினரின் மகளுக்கு ஆண்டுக்கு ரூ.1000/– கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

ii. உறுப்பினரின் மகள் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் ரூ.1000/– கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

iii. 11 ஆம் வகுப்பு படித்து வரும் உறுப்பினரின் மகளின் கல்வி உதவித் தொகையாக ஆண்டுக்கு ரூ. 1000/– வழங்கப்படும்.

iv. 12 ஆம் வகுப்பு படித்து வரும் உறுப்பினரின் மகளுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ 1500/– வழங்கப்படும்.

v. உறுப்பினரின் மகன் அல்லது மகள் + 2 தேர்ச்சி பெற்றால் உதவித் தொகையாக ரூ. 1500/– வழங்கப்படும்.

vi. முறையான பட்டப்படிப்பு பயிலும் உறுப்பினரின் மகன் அல்லது மகளுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் உதவித் தொகையாக ரூ. 1500/– வழங்கப்படும்.

vii. விடுதியில் தங்கி முறையான பட்டப்படிப்பு பயிலும் மகன் அல்லது மகளுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் உதவித் தொகை ரூ. 1750/– என உயர்த்தி வழங்கப்படும்.

viii. உறுப்பினரின் மகன் அல்லது மகள் முறையாக முதுகலை பட்டப்படிப்பு படித்தால் ஒவ்வொரு கல்வியாண்டுக்கும் ரூ. 2000/– வழங்கப்படும் விடுதியில் தங்கிப் படித்தால் உதவித் தொகை ரூ. 3000/– என உயர்த்தி வழங்கப்படும்.

ix. உறுப்பினரின் மகன் அல்லது மகள் சட்டம், பொறியியல், கால் நடை மருத்துவ அறிவியல் அல்லது தொழில்முறை சார்பான தொழிற்கல்வி பயிலும் மாணவருக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் உதவித் தொகை ரூ. 2000/– வழங்கப்படும். அம் மாணவர் விடுதியில் தங்கிப் பயின்றால் அவ்வுதவித் தொகை ரூ 4000/– என உயர்த்தி வழங்கப்படும்.

x. விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் முதுகலை தொழிற்படிப்பு படித்தால் ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் கல்வி உதவித் தொகையாக ரூ. 4000/– வழங்கப்படும் அவர் விடுதியில் தங்கிப் படித்தால் அத்தொகை ரூ. 6000/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.

xi. விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் தொழிற் பயிற்சி நிலையம் அல்லது பாலிடெக்னிக்கில் பயின்றால் ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் கல்வி உதவித் தொகையாக ரூ. 1000/– வழங்கப்படும். அவர் விடுதியில் தங்கிப் பயின்றால் ரூ. 1200/– என உயர்த்தி வழங்கப்படும்.

xii. கல்வி உதவித் தொகை கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

   i) பதிவு செய்யப்பட்ட உறுப்பினரின் **இரண்டு** குழந்தைகளுக்கு மட்டும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

   ii) கணவன் மற்றும் மனைவி கல்வி உதவித் தொகை கோரி விண்ணப்பித்திருந்தால் **இருவரில் ஒருவருக்கு மட்டும்** கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

   iii) உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினரின் மகன்/மகள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அல்லது சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் வழங்கப்படும் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெறத் தகுதியுடையவராக இருப்பின், ஏதாவது ஒரு திட்டத்தில் மட்டுமே உதவித்தொகை பெறத் தகுதியுடையவர் ஆவார். இதனை சம்மந்தப்பட்ட துறையின் ஒப்பளிப்பு அலுவலர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

## 11. திருமண உதவித் தொகை

i. பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது அவரது மகன் அல்லது மகள் திருமணச் செலவிற்கு விண்ணப்பம் செய்தால் உதவித் தொகையாக ரூ. 2000/– வழங்கப்படும். விண்ணப்பத்துடன் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

ii. இவ்வுதவித் தொகை பெற கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

- இவ்வுதவித் தொகை பதிவு பெற்ற உறுப்பினரின் குடும்பத்திற்கு 2 முறை மட்டும் வழங்கப்படும்.
- திருமணச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட வயதை பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும்.
- மகன் அல்லது மகள் திருமண உதவித் தொகை கோரி கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் விண்ணப்பித்திருந்தால் இருவரில் ஒருவருக்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்படும்.

## 12. மகப்பேறு / கருச்சிதைவு/கருக்கலைப்பு உதவித்தொகை

பதிவு பெற்ற பெண் உறுப்பினருக்கு மருத்துவச் சான்றிதழின் பேரில் பின்வருமாறு உதவித் தொகை வழங்கப்படும்.

i) மகப்பேறு – ரூ. 6000/– (மாதம் ரூ. 1000/– வீதம் 6 மாதங்களுக்கு)
ii) கருச்சிதைவு – ரூ. 3000/–
iii) கருக்கலைப்பு – ரூ.3000/–

மருத்துவச் சான்றிதழ் பெறப்பட வேண்டும். பதிவு பெற்ற பெண் உறுப்பினர் 2 முறை மட்டும் இவ்வுதவித் தொகை பெறலாம். பதிவு பெற்ற பெண் உறுப்பினருக்கு ஏற்கனவே 2 பிள்ளைகள் இருப்பின் இவ்வுதவித் தொகை பெறத் தகுதியற்றவராவர்.

## 13. கண்கண்ணாடி வாங்குவதற்கு உதவித் தொகை

பதிவு பெற்ற உறுப்பினர் கண் கண்ணாடி வாங்குவதற்கான செலவை ஈடுகட்டுவதற்கு ரூ. 500/–க்கு மேற்படாமல் உதவித் தொகை வழங்கப்படும்.

பதிவு பெற்ற உறுப்பினருக்கு ஒரே ஒரு முறை தான் இவ்வுதவித் தொகை வழங்கப்படும்.

## 14. பொதுவான அறிவுரைகள்

1. உறுப்பினராகப் பதிவு செய்யும் நபர் 18 வயது பூர்த்தி செய்து 60 வயதிற்குள்ளவராகவும் இஸ்லாமிய மதத்தை சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

2. பதிவு / புதுப்பித்தல் செய்வதற்கு கட்டணம் **ஏதுமில்லை.**

3. உறுப்பினர் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பதிவைப் புதுப்பிக்க வேண்டும்.

4. அடையாள அட்டையை இழந்திருந்தால், சம்பந்தப்பட்ட அலுவலரிடம் ரூ. 20/– செலுத்தி நகல் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம்.

5. இருப்பிடம் மாறினால், புதிய முகவரியை வாரியத்திற்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

6. உறுப்பினர் பணியாளர் திருமணமானபின் மூலப் பதிவு விண்ணப்பப் படிவத்தில் நியமனதாரர் பெயரை மாற்றுவதற்கு வாரியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

7. பணியாளர் இறப்பின், இயற்கை இறப்பு நிதியுதவிக்கான விண்ணப்பப் படிவத்துடன் மூல அடையாள அட்டையை வாரியத்திடம் சரணடைப்பு செய்யவேண்டும்.

8. ஒவ்வொரு முறையும் நல நிதியுதவி கோரும் விண்ணப்பத்துடன் அசல் அடையாள அட்டையை இணைக்க வேண்டும்.

## 15. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்

| | | |
|---|---|---|
| 1. | **விபத்து ஈட்டுறுதித்திட்டத்தின் கீழ்** | உதவித்தொகை (ரூ.) |
| | அ . விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | 1,00,000 |
| | ஆ. விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000 முதல் 1,00,000 வரை |
| 2. | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | 15000 |
| 3. | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | 2000 |
| 4. | **கல்வி உதவித்தொகை** | |
| | அ. 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1000 |
| | ஆ. 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1000 |
| | இ. 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1000 |
| | ஈ. 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1500 |
| | உ. 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | 1500 |
| | ஊ. முறையான பட்டப்படிப்பு | 1500 |
| | மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பு | 1750 |
| | எ. முறையான பட்ட மேற்படிப்புக்கு | 2000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | 3000 |
| | ஏ. தொழிற்கல்வி பட்ட படிப்புக்கு (Professional Courses in Under Graduate level) | 2000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட படிப்பு (Professional Courses in Under Graduate level) | 4000 |
| | ஐ. தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு (Professional Courses in Post Graduate level) | 4000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு (Professional Courses in Post Graduate level) | 6000 |
| | ஒ. ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் ஐடிஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1200 |
| 5. | திருமண உதவித்தொகை | 2000 |
| 6. | மகப்பேறு உதவித்தொகை | |
| | அ. மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் | 6000 |
| | ஆ. கருச்சிதைவு/கருக்கலைப்பு | 3000 |
| 7. | கண் கண்ணாடி செலவுத்தொகையை ஈடு செய்தல் | 500 (அதிகபட்சம்) |
| 8. | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | 400 |

## 16. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை, அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்

| வ.எண். | பொருள் | படிவம் எண். |
|---|---|---|
| 1. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினராக பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம். | 1 |
| 2. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை | 2 |
| 3. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினர் விபத்தினால் இறப்பு அல்லது ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப உதவித்தொகை கோரும் விண்ணப்பப்படிவம். | 3 |
| 4. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினர் இயற்கை மரணம்/ ஈமச்சடங்கு உதவித்தொகை பெற விண்ணப்பப்படிவம். | 4 |
| 5. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய இனத்தைச் சார்ந்த உறுப்பினரின் மகள் 10 ஆம் வகுப்பு/12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பப்படிவம். | 5 |
| 6. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினரின் மகள் 10 ஆம் வகுப்பு/11 ஆம் வகுப்பு/12 ஆம் வகுப்பு பயில்வதற்கு கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பப் படிவம். | 6 |
| 7. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினரின் மகன்/மகள் முறையான பட்டப்படிப்பு/ பட்டமேற்படிப்பு/ தொழிற் கல்வி/தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு/ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பிற்கு கல்வி உதவித்தொகை விண்ணப்பப் படிவம். | 7 |
| 8. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினர்/ உறுப்பினரின் குடும்ப உறுப்பினர் திருமண உதவித்தொகை விண்ணப்பப்படிவம். | 8 |
| 9. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினரின் மனைவி/குடும்பப்பெண் உறுப்பினரின் பிரசவ காலம் அல்லது குறைப்பிரசவம்/கருச்சிதைவுக்கான நிதியுதவி பெற விண்ணப்பப்படிவம். | 9 |
| 10. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு கண் கண்ணாடி வாங்குவதற்கு உதவித்தொகை கோரும் விண்ணப்பப்படிவம். | 10 |
| 11. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினரின் முதியோர் ஓய்வூதியம் கோரும் விண்ணப்பப்படிவம். | 11 |
| 12. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினரின் முடக்க ஓய்வூதியம் கோரும் விண்ணப்பப்படிவம். | 12 |

# உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்

## படிவம் – 1

**உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.**

பதிவு எண். ..............................
( அலுவலகத்தில் பூர்த்தி செய்யப்படும்)

புகைப்படம்

1) உறுப்பினரின் பெயர் :

2) தந்தை / கணவர் பெயர் :

3) விண்ணப்பதாரரின் பிறந்த தேதி (வயதிற்கு ஆதாரமாகச் சான்றிதழ் இணைக்கப்படவேண்டும்.)

நாள் மாதம் ஆண்டு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

4) திருமண நிலை ( திருமணம் ஆனவரா ? விதவை / மனைவியை இழந்தவர் ) :

5) நிரந்தர முழு விலாசம் :

6) தற்போதைய முகவரி :

7) உலமா / பணியாளராக பணிபுரியும் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி :

8) பணிபுரியும் பதவியின் பெயர் :

9) விண்ணப்பிக்கும் நாளில் எத்தனை ஆண்டுகள் சம்பந்தப்பட்ட வேலையிலிருந்து வருகிறார் :

10) குடும்ப உறுப்பினர்களின் விவரம்

| வ. எண் | பெயர் | வயது | உறவு முறை | குடும்ப உறுப்பினர் படித்துக் கொண்டிருப்பவரானால் தற்போது படிக்கும் வகுப்பு | திருமண நிலை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

11) மனைவி / கணவர் வேலையிலிருப்பவரா ?
ஆம் எனில் பணிபுரியும் நிறுவனத்தின் பதவி மற்றும் முழு விலாசம். :

12) நியமனதாரரின் விவரங்கள்

| நியமனதாரர் பெயர் மற்றும் முகவரி (1) | நியமனதாரர் பணியாளருக்கு என்ன உறவுமுறை (2) | நியமனதாரின் வயது (3) | நியமனதாரர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட வேண்டியத் தொகை (4) |
|---|---|---|---|
| | | | |
| | | | |

13) வேறு ஏதேனும் வாரியத்தில் உறுப்பினராக உள்ளாராயின் அவ்வாரியத்தின் பெயர் மற்றும் உறுப்பினர் எண் :

விண்ணப்பதாரரின் முழு கையொப்பம்
அல்லது இடது கை பெருவிரல் ரேகை

---

<u>பணிச் சான்றிதழ்</u>

மேலே விண்ணப்பதாரரால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் நான் அறிந்த வரையில் உண்மை எனச் சான்றளிக்கிறேன்.

இடம்
நாள்

**அலுவலக முத்திரை**

சான்றிதழ் வழங்கும் நிறுவன
முத்தவல்லி / நிர்வாக அலுவலரின்
பெயர் மற்றும் கையொப்பம்

<u>அலுவலக உபயோகத்திற்கு மட்டும்</u>

கோப்பு எண்: நாள்

மேற்கண்ட விண்ணப்பம் மற்றும் பணிச் சான்றிதழ் என்னால் விசாரணை செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டது. விண்ணப்பதாரரை உறுப்பினராகப் பதிவு செய்ய பரிந்துரை செய்கிறேன்.

**வக்ஃப் கண்காணிப்பாளர் பெயர்
மற்றும் கையொப்பம்**

**இடம்**
**நாள்**

**அலுவலக முத்திரை**

மனுதாரரை உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினராக சேர்க்க ஒப்புதல் வழங்கப்படுகிறது.

**உறுப்பினர் அடையாள
அட்டை எண்:**

**மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்
பெயர் மற்றும் கையொப்பம்**

## உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்

## படிவம் – 2

### அடையாள அட்டை

| புகைப்படம் |
|---|

**பதிவு எண் / நாள் :**

1) பெயர் :

2) தந்தை / கணவர் பெயர் :

3) பிறந்த தேதி / வயது :

4) உலமா மற்றும் பணியாளர் குறித்த பணி விவரங்கள் :

5. தற்போதைய முழு முகவரி :

6. நிரந்தர முகவரி :

7. திருமண நிலை

8. குடும்ப உறுப்பினர்களின் விபரம் :

| வ.எண் | பெயர் | வயது | பாலினம் | உறவு முறை |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

9. நியமனதாரர்களின் விவரங்கள் (Nominees) :

| வ.எண் | பெயர் | வயது | பாலினம் | உறவு முறை |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

10, வேறு வாரியத்தில் உறுப்பினராக இருப்பின் :
வாரியத்தின் பெயர் மற்றும் உறுப்பினர்
பதிவு எண்

உலமா / பணியாளரின் கையொப்பம்

நாள் :

பதிவு அலுவலரின் கையொப்பம்

பெயர் :

பதவி :

## உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தின் மூலம் வழங்கப்பட்ட நல உதவிகள் விபரம்

